நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டிபட்டி.

முன்னிலை – திரு.H.பாசில் முகமது B.B.A.,LL.B(HONS)
நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.
2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை
சுருக்கு வழக்கு எண் : 430/2025

அனுசியா

மனுதாரர்

/ எதிர் /

பிரபாகரன்

எதிர்மனுதாரர்

**வழக்கின் சுருக்கம்**

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | மனுதாரர்<br>அனுசியா | எதிரி<br>பிரபாகரன் |
| 2. | எதிரியின் வயது | 39 |
| 3. | தந்தை/கணவர் பெயர் | த.பெ.வேலுச்சாமி |
| 4. | மதம் | இந்து |
| 5. | தொழில் | கூலி |
| 6. | முகவரி | அம்பேத்கர் நகர் வருசநாடு |
| 7. | தாலுகா, மாவட்டம் | ஆண்பட்டி தாலுகா, தேனி |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | 16.12.2021 |
| 9. | கைது | - |
| 10. | பிணையில் விடுவித்தல் | - |
| 11. | எதிரி சிறையில் இருந்த | – |



FAZIL
MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:52:17 +0530

<table>
<tr><td></td><td>நாட்கள்</td><td colspan="3"></td></tr>
<tr><td>12.</td><td>புகார் மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">09.06.2025</td></tr>
<tr><td>13.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி</td><td colspan="3">02.07.2025</td></tr>
<tr><td>14.</td><td>கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி</td><td colspan="3">03.03.2026</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச பிரிவு 281–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">11.03.2026</td></tr>
<tr><td>16.</td><td>விசாரணை துவக்கம்</td><td colspan="3">-</td></tr>
<tr><td colspan="2" rowspan="2">17.சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td colspan="3">12.03.2026</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">12.03.2026</td></tr>
<tr><td colspan="2">20.பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="3">தண்டனை</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="3">ஆம்</td></tr>
<tr><td>23.</td><td>தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள்</td><td colspan="3">–</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td colspan="3">இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td colspan="3">இல்லை.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="3">–</td></tr>
</table>



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:52:28 +0530

இவ்வழக்கானது, கடந்த 16.03.2026 ஆம் தேதியன்று என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தர்மக்கொடி அவர்களும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.P சுதாகரன் அவர்களும் முன்னிலையாகி, முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், மனுதாரர் தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>தீர்ப்புரை</u>

1). <u>மனுதாரர் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

இந்த வழக்கில் எதிர்மனுதாரரும் கணவர் மனைவி ஆவார்கள். மனுதாரர் மற்றும் அவரின் மைனர் குழந்தைகளுக்காகவும், இந்த வழக்கின் எதிரிக்கு எதிராக DVC 09/2021 என்ற வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கில் கடந்த 22.12.2023 அன்று மனுதாரரக்கு ஆதரவாக மனுதாரரை எதிர்மனுதார்களோ அல்லது அவர்களை சார்ந்தவர்களோ, அவர் குடியிருக்கும் இடத்திலோ பணிசெய்யும் இடத்திலோ எவ்வித தொந்தரவும் செய்யக்கூடாது என்று Protection order பிறப்பித்தும், 1 ம் மனுதாரருக்கும் 1 ம் எதிர்மனுதாரர் மாதம்ரூ, 7,000/-ம் 2 மற்றும் 3 மனுதாரர்களுக்கு தலா ரூ.5,000 ம் ஆக மொத்தம் ரூ 17, 000 மாதந்திர ஜீவனாம்சமாக ஒவ்வொரு ஆங்கில மாதம் 5 ம் தேதிக்குள் DVC 09/2021 வழக்கில் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழங்கவேண்டும் என்று வழங்க வேண்டும் என்றும் எதிரி மனுதாரரின் சீதபொருட்களை திரும்ப ஒப்படைக்கவேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்ட்டது என்றும் இதுநாள் வரையில் எதிரி சீதானபொருட்களை திரும்ப கொடுக்கவில்லை என்றும் ஜீவனாம்சம்



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:52:33 +0530

பணத்தை இதுவரை செலுத்தவில்லை என்றும் எனவே நீதிமன்ற வழங்கிய உத்தரவினை எதிர்மனுதாரர் பின்பற்றவில்லை என்று இந்தமனு தாக்கல் செய்துள்ளது.

2).இவ்வழக்கின் எதிரி, இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் ப.நி.சு.ச சட்டம் பிரிவு 316–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்கிற்கான ஆரம்ப முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரியின் மீது பிரிவுகள் குடும்ப வன்முறை பெண்கள் பாதுகாப்பு சட்டம் 2005 பிரிவு 31 ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, எதிரியிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி எனக்கே வழக்கே தெரியாது வீட்டுகடன் கொடுக்கிறேன் நான் மகளிர் காவல் நிலையத்தில் எல்லாம் கொடுத்துவிட்டேன் என்றும் கூறினார் எனவே, வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய, வழிவகை செய்யப்பட்டது.

**3.மனுதாரர் தரப்பு சாட்சியம்**

மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் எதிரி ஜீவனாசம் வழங்கவில்லை என்றும் அவர் சீதான பொருட்கள் வழங்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யபடவில்லை. மனுதாரர் சாட்சியம் முடித்துவைக்கப்ட்டது

4) மனுதாரர் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள பொருண்மைகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவியபோது, மனுதாரர் தரப்பு சாட்சியத்தை எதிரி பொய் சாட்சியம் என்றும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்.



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:52:40 +0530

5).இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

**6.மனுதாரர் தரப்பு வாதம்**

கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, எதிரி இதுநாள் வரையில் ஜீவனாம்சம் கொடுக்கவில்லை என்றும் எந்த முறையான காரணங்களும் கொடுக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான வழக்கானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே, எதிரிக்கு தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

**7. எதிரி தரப்பு வாதம்**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி மனுதாரர் காவல்நிலையத்தில் வைத்து 7 பவுன் நகையை திரும்ப கொடுத்துவிட்டதாகவும் எதிரி மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளதாகவும், ஆகையால் எதிரியை வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்

8. தீர்க்கபட வேண்டிய பிரச்சனைக்குரிய கேள்வி

இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான 31 DVC ன் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

9.முடிவுக்கான விளக்கம்

9.1) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:52:46 +0530

9.2) மனுதாரர்  தரப்பு வழக்கானது எதிரி சீதானபொருட்களை திரும்ப கொடுக்கவில்லை என்றும் ஜீவனாம்சம் பணத்தை இதுவரை செலுத்தவில்லை என்பதே ஆகும்,

9.3)சங்கதிகளையயும் சாட்சியங்களையும் வைத்துக் இவ்வழக்கில் குற்றசாட்டுகளின் முக்கிய கூறுகள் அமையப்பெறுகிறதா என்று ஆராய்வது அவசியமாகிறது.

9.4) DVC 31 ன் கீழ் கூறுவதாகவது **31. Penalty for breach of protection order by respondent–(1)A breach of protection order, or of an interim protection order, by the respondent shall be an offence under this Act and shall be punishable with imprisonment of either description for a term which may extend to one year, or with fine which may extend to twenty thousand rupees, or with both.(2)The offence under sub-section (1) shall as far as practicable be tried by the Magistrate who has passed the order, the breach of which has been alleged to have been caused by the accused.(3)While framing charges under sub-section (1), the Magistrate may also frame charges under section 498-A of the Indian Penal Code (45 of 1860) or any other provision of that Code or the Dowry Prohibition Act, 1961 (28 of 1961), as the case may be, if the facts disclose the commission of an offence under those provisions.** அதாவது  நீதிமன்றம் வழங்கிய பாதுகாப்பு உத்தரவினை மீறுதல் குற்றமாக கருதப்படுகிறது.

9.5)அ.சா.1 தனது சாட்சியத்தில் **"நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் கடந்த முறை வழக்கில் எனக்கு ஆதரவாக  நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. அதில் எனக்கு மாதம் மாதம் ரூ.17 ஆயிரம் வழங்கவும், என்னுடைய சீதன பொருட்களை திருப்பி கொடுக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இது நாள் வரையில் எனக்கு எந்த தொகையையும் எதிர்மனுதாரர் கொடுக்கவில்லை."** என்றும்  சாட்சியம் அளித்திருந்தாலும்  தனது குறுக்கு விசாரணையில் **நான் ஆண்டிபட்டி**



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:52:52 +0530

**அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வைத்து 7 பவுன் நகையை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான் மொத்தம் எனக்கு திருமணத்தின் போது 13 பவுன் நகை போடப்பட்டது எனக்கு திருமணத்தின் போது மொத்தம் 10 பவுன் நகை போடப்பட்டது என்றால் சரியல்ல**. என்றும் சாட்சியம் அளித்துள்ளார். நகைகள் குறித்து சற்று முரண்பாடுகள் இருந்தாலும், எதிர்மனுதாரர் தரப்பில் ரூ 17,000 மாதம் ஜீவனாம்சமாக கொடுத்தாக எந்த வாதமும் எழுப்பப்படவில்லை எதிர்மனுதாரர் இந்தநீதிமன்றம் வழங்கிய உத்திரவின்படி ஜீவனாம்சம் செலுத்தாதற்கு எந்த முறையாக காரணங்களும் முன்வைக்கப்படவில்லை.எனவே நீதிமன்ற உத்தரவின்படி எதிரி ஜீவனாம்சம் செலுத்தவில்லை என்பது தெரியவருகிறது. ஜீவனாம்சம் தொகை செலுத்தாமல் இருப்பது பிரிவு 31 கீழ் குற்றமாக கருதப்படுமா என்று ஆராய்ந்து பார்த்தோம் ஆனால் **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Maria** Ravi Sahaya Raj v. Sawariamma. Crl. O.P (MD) No. 12942 of 2015 ( 2020 MWN CR 3 240) **என்ற வழக்கில் பின்வருமாறு கூறியுள்ளது** **" 11. I feel like citing this story because the answer to the question already lies in Rule 15 (7). Rule 15(7) of the Protection of Women from Domestic Violence Rules, 2006 reads as follows : “15.Breach of Protection Orders.- (1).. (2).. (3)... (4)... (5)... (6)... (7)Any resistance to the enforcement of the orders of the Court under the Act by the respondent or any other person purportedly acting on his behalf shall be deemed to be a breach of protection order or an interim protection order covered under the Act.” The sub- rule states that by a legal fiction, any order that may be passed under the Act whether it is residence order or compensation order or custody order or maintenance order will be deemed as a protection order. Therefore, for breach of any order of the court under the Acts, prosecution under Section 31 of the Act will certainly lie. 12. The learned counsel appearing for the petitioners primarily contended that in as much as the**



FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:53:01 +0530

**petitioners 2 to 5 herein were not shown as respondents in the original petition, they could not be shown as accused in the complaint filed under Section 31 of the Act. It is true that the petitioners 2 to 5 herein are not parties to the order made in Cr.MP No.8535 of 2011. But, I have to reject the objection as regards the maintainability in view of the Rule 15(7). The said sub-rule talks about the resistance to the enforcement order not only by the respondent but also by any other person purportedly acting on his behalf. Section 31 and Section 32 of the Act will have to be read together. While Section 31(1) employs the expression "respondent", Section 31(2) and Section 32(2) refer to the offence committed by "the accused". Therefore, reading Section 31 of the Act along with Rule 15(7), I have to come to the conclusion that the impugned prosecution is very much maintainable. என்று கூறியுள்ளது. மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் S.AMALRAJ VS STATE REP BY INSPECTOR OF POLICE DEVAKOTTAI AND ORS Crl.O.P.(MD)No.15704 of 2018** என்ற வழக்கில் பின்வருமாறு கூறியதாவது**"21. In the result this Court holds as follows:–Section 31 of the DV Act is a key provision and heartbeat of the DV Act to regulate the violator of protection order passed under Section 18 of the DV Act. The question as to whether the law enforcing authority has jurisdiction to register the Criminal Case under Section 31 of the Act for non–payment of maintenance allowance which is deemed to be breach of protection order under Section 18 of the Act, is answered affirmatively and the law enforcing authority has jurisdiction to register the case and proceed in accordance with law for every breach of order without any legal bar for the reason that each breach of order amounts to a continuing offence"**

9.6)எனவே மேற்கூறிய முன்தீர்ப்புகளின் அடிப்படையில் குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் ஜீவனாம்சம் வழங்காமல் இருப்பது பிரிவு 31 ன் கீழ் குற்றமாகவே கருதப்படுகிறது. இந்த வழக்கில் இந்த நீதிமன்றம் DV 09/2021



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:53:08 +0530

வழக்கில் கடந்த 22.12.2023 அன்று வழங்கிய உத்தரவின்படி மனுதாரரக்கு மற்றும் அவரது மைனர் குழந்தைகளுக்கும், எதிரி ஜீவனாம்சம் கொடுக்கவில்லை. அதற்கு எந்த முறையான காரணங்களும் முன்வைக்கப்படவில்லை. எதிரி கணவர் என்ற அடிப்படையிலும் மைனர் குழந்தைகளுக்கு தந்தை என்ற முறையிலும் மனுதாரரையும் அவரது குழந்தைகளையும் பராமரிக்க கடமைபட்டுள்ளார். எந்த முறையான காரணங்களும் இன்றி எதிரி அந்த கடமைகளில் இருந்து தப்ப இயலாது மேலும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்க இயற்றப்பட்ட சட்டம் ஆனாது ஒரு சமூகநல சட்டம் ஆகும். அந்த சட்டம் இயற்றப்பட்டதற்காக நோக்கத்தை நிறைவேற்றுவது நீதிமன்றத்தின் கடமை ஆகும். எனவே இந்த வழக்கில் எதிரி ஜீவனாம்சம் செலுத்தவில்லை என்பது உறுதியானதால் அவரை இந்த வழக்கில் எதிரி குற்றவாளி என்று முடிவு செய்து தண்டனை வழங்க தீர்மானிக்கிறது.

**10)முடிவாக**

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவு 31 of DV ACT-ன் கீழான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு இடமில்லாமல் மனுதாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டது. எனவே, எதிரியை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 255(2) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**11)தண்டனை விபரம்**

இந்த வழக்கின் சங்கதிகளையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு எதிரிக்கு 6 மாதம் மெய்காவல் சிறைதண்டனையும் ரூபாய் 10,000/- அபராதமாக செலுத்த உத்தரவிடப்படுகிறது செலுத்த தவறும் பட்சத்தில் 30 நாள் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க உத்தரவிடப்படுகிறது.

**12.**மேற்படி அபராதத்தொகை ரூ.**10,000/-** மனுதாரர்க்கு இழப்பீடு தொகையாக



FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:53:13 +0530

வழங்க உத்தரவிடப்படுகிறது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மனுதாரர் மனு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(மாண்பமை மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவிற்கு உட்பட்டு)

13 இவ்வழக்கு வழக்கு தடய சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை ஆகையால் வழக்கு தடய சொத்து குறித்து உத்தரவு இல்லை.

14)எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது

இந்த தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் வைத்து, அவையறிய பகரப்பட்டது.

FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:53:17 +0530

நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.

1.மனுதாரர் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திருமதி.அனுசியா |

2). மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை.

3). மனுதாரர் சான்று பொருள்: இல்லை.

4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள்: இல்லை.

FAZIL MOHAMED H
Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.03.27 18:53:21 +0530

நீதித்துறை நடுவர்
ஆண்டிபட்டி.